**IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT**

| | | | | |
|---|---|---|---|---|
| | | OS. No. | | **150/2018** |
| | | P/W's | : | **PW1** |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | மூர்த்தி என்ற ராமமூர்த்தி | CASTE | : | |
| S/O | சின்னமருதன் | RELIGION | : | இந்து |
| VILLAGE | கச்சிராயிருப்பு | CALLING | : | |
| TALUK | வாடிப்பட்டி | AGE | : | **40** |

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 03.11.2025**

**4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

1. நான் தற்போது கச்சிராயிருப்பில் குடியிருக்கிறேன். எனது வீட்டின் முகவரி கதவு எண் 1/262, ரைஸ்மில் காலனி, சிவநாதபுரம். அதன் சர்வே எண் 1/18. அந்த வீடு எனது அக்கா பாப்பாத்தியின் வீடு. எனது அக்கா வீடு என்பதைக்காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, நான் வாடகைக்கு குடியிருந்து வருகிறேன். எனது அக்கா பாப்பாத்தி வழக்கில் 2 ம் பிரதிவாதியாக உள்ளார். நான் குடியிருக்கும் வீட்டின் பட்டா எனது பெரியப்பா ஐயர் பேரில் இருந்தது என்றால் சரிதான்.

2. மேற்படி வீட்டை எனது பெரியப்பா லெட்சுமணன் என்பவருக்கு கிரையம் கொடுத்து அதன்படி லெட்சுமணன் பெயரில் பட்டா மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி கிரையப்பத்திரத்தில் நான் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்ட காலத்தில் நானும் எனது அப்பாவும் கச்சியிராப்பில் வசிக்கவில்லை என்றால் சரிதான். கச்சியிராப்புக்கு 2007 ல் வந்தேன். நான் சர்வே எண் 97/22 க்கு வழக்குத்தாக்கல் செய்துள்ளேன்.

3. வா.சா.ஆ.8 ன்படி லெட்சுமணன் சர்வே எண் 97/18 ல் உள்ள சொத்தை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி சர்வே எண்ணுக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட பத்திரத்தை செல்லாது என்று கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரிதான். சர்வே எண் 97/18 ல் எனக்கு எந்த உரிமையும் இல்லை. சர்வே எண் 97/18 ஐ லெட்சுமணன் கிரையம் வாங்கியபின்பு அவர் பெயரில் பட்டா மாற்றிய விவரம் எனக்குத்தெரியாது. மேற்படி சொத்தை கிரையம் பெற்றதிலிருந்து லெட்சுமணன்

தான் அனுபவம் செய்து வருகிறார் என்றாலும் அதில் நான் வாடகைக்கு குடியிருந்து வருவதாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4. சர்வே எண் 97/18ல் உள்ள வீட்டை லெட்சுமணன் தான் அனுபவம் செய்துவருகிறார் என்றால் சரியல்ல. எனது வழக்குரையில் சொத்துவிவரத்தில் வீடு இருப்பதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான். காலியிடத்திற்கு மட்டும்தான் நீதிமன்ற கட்டணம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்குரையை திருத்தம் செய்து சொத்துவிவரத்தில் வீடு என்று மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது என்றாலும், அதற்கான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றாலும் சரிதான்.

5. எனது வீட்டின் கிழமேல் அடியளவு 33 அடி, தென்வடல் 34 அடி. எனது வீட்டின் மதிப்பு எனக்குத்தெரியாது. எனது வீட்டின் மதிப்பு 10லட்சம் பெறும் என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. வழக்குச்சொத்திலுள்ள வீட்டையும் அதன் மதிப்பீட்டையும் குறிப்பிட்டால் வழக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியாத என்பதால் தான் வீட்டை குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

6. தூய கரங்களுடன் நீதிமன்றத்தை அணுகாததால் நான் கேட்டுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்குச்சொத்தை நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்தபோது அங்குதான் இருந்தேன். நீதிமன்ற ஆணையர்அறிக்கை சர்வே எண் 97/22ன் வடகிழக்கு மூலையில் ராமு என்பவர் ஆக்கிரமித்து செட் போட்டுள்ளார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் மேற்படி ராமுவை வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றாலும் சரிதான். மேற்படி ராமுவை வழக்கில் சேர்க்காததாலும் அவர் ஆக்கிரமித்துள்ள பகுதியை மீட்டு தருமாறு பரிகாரம் கேட்காததாலும் வழக்கு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

7. நான் 4 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக கேட்டுள்ள பரிகாரங்கள் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

//True copy//
Sd/- M.P.Ramkishore
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி.